# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 86 /பேரூ/2024**
**நாள் : 10 .10.2024**

திரு. A. ராமு,
சின்னசேலம், கள்ளக்குறிச்சி மாவட்டம். – மனுதாரர்

செயல் அலுவலர்,
வடக்கனந்தல் பேரூராட்சி
கள்ளக்குறிச்சி மாவட்டம். – எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கரடிசித்தூர் அஞ்சல், சூசை நகர் கிழக்கு, எண். 2/432 என்ற முகவரியை சேர்ந்த திரு. A. ராமு என்பவரது 22.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.11.2023 அன்று பெறப்பட்டு, 86/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கரடிசித்தூர் அஞ்சல், சூசை நகர் கிழக்கு, எண். 2/432 என்ற முகவரியை சேர்ந்த திரு. A. ராமு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"சின்னசேலம் வட்டம், கச்சிராயப்பாளையம் LF ரோட்டில் பாரதி பள்ளி எதிரில் திரு, எம். அண்ணாமலை என்பவர் வசித்துவரும் இடத்திலேயே சொந்தமான கடை கட்டடம் உள்ளது. இந்த கட்டடத்தில் சுமார் 10 கடைகள் உள்ளன. இந்த கட்டடம் வடக்கனந்தல் பேரூராட்சியின் அனுமதி பெறாமல் கட்டப்பட்டு கடந்த 2013ஆம் ஆண்டு முதல் செயல்படுவதாக தெரிகிறது. அதற்கு ஆதாரமாக மேற்படி திரு. அண்ணாமலை பெயரிலுள்ள ஒரு கடைக்கான மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. (மின் இணைப்பு எண்.02 553 006 709). மேற்படி கட்டடத்திற்கு

வழங்கப்பட்ட கட்டட அனுமதி குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டம் வாயிலாக கடந்த 18.10.2023 தேதியில் வடக்கனந்தல் பேரூராட்சியின் பொது தகவல் அலுவலர் மற்றும் செயல் அலுவலருக்கு அஞ்சல் மூலம் விண்ணப்பம் அனுப்பியதற்கு, வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் 07.11.2023 தேதியிட்டு அனுப்பிய பதிலில் "திரு. எம். அண்ணாமலை, LF ரோடு, பாரதிபள்ளி எதிரில், கச்சிராயப்பாளையம் என்ற முகவரியிட்ட நபரிடமிருந்து கட்டட அனுமதி வழங்க கோரி விண்ணப்பம் ஏதும் வடக்கனந்தல் பேரூராட்சி அலுவலகத்திற்கு வரப்பெறவில்லை" என தெரிவித்துள்ளார்.

திரு. அண்ணாமலை என்பவரின் கடை கட்டடம் வடக்கனந்தல் பேரூராட்சியின் கட்டட அனுமதி பெறாமல் கட்டப்பட்டு செயல்பட்டு வரும் கட்டடத்திற்கு வடக்கனந்தல் பேரூராட்சியால் சொத்துவரி சட்டவிரோதமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இது இந்திய அரசியலமைப்பு சட்டஉறுப்பு 265க்கு எதிரானதாகும். திரு. அண்ணாமலை முறைப்படி வடக்கனந்தல் பேரூராட்சியிடமிருந்து கட்டட அனுமதி பெறாமல் கட்டடம் கட்டியதால் வடக்கனந்தல் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. சட்டப்படி அனுமதி பெறாமல் கட்டப்பட்ட திரு. அண்ணாமலையின் கட்டடத்திற்கு வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் ஊழியர்கள் கையூட்டு பெற்றுக் கொண்டு சட்ட விரோதமாக சொத்து வரி விதித்து வசூலித்து வருகிறார்கள். திரு. அண்ணாமலையின் சட்ட விரோத கடை கட்டடத்தின் மீது வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வடக்கனந்தல் பேரூராட்சி சட்ட விரோத கட்டுமானங்களுக்கு ஆதரவாக செயல்படுவது தெரிய வருகிறது.

எனவே, தாங்கள் தயவு செய்து பொது நலன் கருதி வடக்கனந்தல் பேரூராட்சியில் கட்டட அனுமதி பெறாமல் செயல்பட்டு வரும் திரு. அண்ணாமலைக்கு சொந்தமான கடை கட்டடத்திற்கு விதிக்கப்பட்ட சொத்துவரிகளை இரத்து செய்வதுடன், கட்டட அனுமதி பெறாத கட்டடத்தை இடிக்க தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், சட்டவிரோதமான கட்டட அனுமதி பெறாத கட்டடத்திற்கு சொத்து வரி விதித்த வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் ஊழியர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 09.09.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"கச்சிராயபாளையம் பாரதி பள்ளி அருகில் திரு. அண்ணாமலை த/பெ. முத்துசாமி என்பவருக்கு சொந்தமான வணிகக் கட்டடம், கட்டட அனுமதியின்றி செயல்பட்டு வருவதாக

தெரிவித்து கட்டடத்தை இடித்து அகற்ற மனுதாரர் 02.02.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

வடக்கனந்தல் பேரூராட்சி நிர்வாகத்தால் அரசு விதிமுறைகளின்படி வணிகக் கட்டடத்திற்கு 2000 சதுர அடி மட்டும் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்க இயலும் எனவும், 2000 சதுர அடிக்கு மேற்பட்ட வணிகக் கட்டடங்களுக்கு நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெற்று அதன் பின்னர் பேரூராட்சி அலுவலகத்தால் அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து, மேற்படி கட்டடம் தொடர்பாக நகர் ஊரமைப்பு துறையினை அணுகி அனுமதி பெற்று அதன் விவரத்தினை பேரூராட்சி அலுவலகத்தில் தெரிவிக்க வடக்கனந்தல் பேரூராட்சி கடிதக்குறிப்பு ந.க.எண்.39/2024/அ1 நாள் 04.03.2024 மற்றும் 28.08.2024–ன் படி திரு. மு. அண்ணாமலை என்பவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி கட்டடத்திற்கு நாளது வரை நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெறப்பட்ட விவரம் பேரூராட்சியில் ஒப்படைக்கப்படாததால் பேரூராட்சி மூலம் கட்டட உரிமம் மற்றும் சொத்துவரி விதிப்பு மேற்கொள்ளப்படவில்லை. மனுதாரரின் குற்றச்சாட்டு மனுவில் மேற்படி கட்டடத்திற்கு சொத்துவரி விதித்து தற்போது வரை வரிவசூலித்து வருவதாக உண்மைக்கு புறம்பாகவும், எவ்வித ஆதாரமின்றியும் தவறான தகவலை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் மனுதாரர் மேற்படி கட்டடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P.No.11143/2024) தொடர்ந்துள்ளார். அவ்வழக்கில் திரு. அ. ராமு, மனுதாரர் மேற்படி கட்டடத்தினால் எவ்விதத்தில் பாதிக்கப்படுகிறார் என்ற விவரத்தினை இரண்டு வாரங்களுக்குள் மனுவாக தாக்கல் செய்ய மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்புரை நாள் 24.06.2024–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் கட்டட அனுமதிக்கு முரணாக கட்டப்பட்ட கட்டடத்தை அகற்றக் கோரி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையினை எதிர்த்து, கட்டட உரிமையாளர் திரு. அ. ராமு என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு (வழக்கு எண். W.P.No.11143/2024), வழக்கின் 24.06.2024 தேதிய இடைக்கால உத்தரவில் திரு. அ. ராமு மனுதாரர் மேற்படி கட்டடத்தினால் எவ்விதத்தில் பாதிக்கப்படுகிறார் என்ற விவரத்தினை இரண்டு வாரங்களுக்குள் மனுவாக தாக்கல் செய்ய மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் ஆணையிட்டுள்ள நிலையில், இவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் மூலம் அறிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால் இப்பொருள் தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) A. ராமு,
எண். 2/432, சூசை நகர் கிழக்கு,
கரடிசித்தூர் அஞ்சல், சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
வடக்கனந்தல் பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர்,
(Nodal Officer) (பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

14/10/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032